MASTER NEGATIVE NUMBER

6152.2

தனவைசிய ஊழியன்

மலர் 5, இதழ் 22

February 17, 1925

Record no. 148

Taṉavaiciya ūḻiyaṉ

Malar 5, itaḻ 22

February 17, 1925

Record no. 148

உ சிவமயம்

சென்னைப் பதிவு எண் கருOக. தந்திவிலாசம்:—"Oolian"

தனவைசிய ஊழியன்

செவ்வாய்க்கிழமை தோறும் வெளி வருவது.

ஆசிரியன்:—ராய. சொக்கலிங்கன்.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்—திருக்குறள்.

வழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்—திருக்குறள்.

மலர் ரு. காரைக்குடி ரக்தாக்ஷி௵ மாசி௴ சு-உ (கஎ—ங—க௯உ௫) இதழ் உக.

சேரமாதேவி குருகுல விஷயமாய்ப் பத்திரிகைகளில் வரும்விஷயங்களை இடைவிடாது கவனித்துக் கொண்டு வருகிறோம். இது சமயம் நான் சில விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் நேர்ந்திருப்பதால் இதை வரைகின்றேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு திருநெல்வேலிக்குச் சென்று குருகுலத்தைப் பார்த்து விட்டு வரும்போது, மதுரையில் நமது உத்தமதேசபக்தர் ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்களைக் கண்டேன். குருகுல விஷயமாய்ப் பேசும் போழ்து, அங்கு நடக்கும் சாப்பாட்டு வித்தியாசத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் நேரே குருகுலம் சென்றிருந்தும், ஐயரவர்களிடம் கொண்ட பக்தியால் அங்குத்தனித்துச்சாப்பிட்டதைக் கண்ணுற்றுக் கண்டுங்கூட, விகற்பமாக நான் எண்ணினேனல்லேன். ஊர்சேர்ந்ததும் இப்படி வித்தியாசமிருப்பது சரியன்றென்று நானும் எனது ஆருயிர் அன்பர் அமராவதிபுதூர் ஆ. சொக்கலிங்கன் அவர்களும் ஸ்ரீமான் வ. வெ. சு. அவர்களுக்கு எழுதியிருந்தோம். இந்தவித்தியாசத்தை ஒழித்து விட வேண்டியது அவசியமே யென்றும், இப்பொழுதிருக்கும் பிள்ளைகளை விலக்குவது நியாயமில்லை யென்றும், ஆனால் இனி தனித்துண்ணும் பிள்ளைகள் சேர்க்கப் படமாட்டா வென்றும் எழுதியிருந்தார்கள். இது சரிதானென்று நாங்களும் எழுதிவிட்டோம்.

இஃதிவ்வாறாக, ஸ்ரீமாந் மகாதேவஐயர் பினாங்கு வந்திறங்கினதும் முதலிற் சந்தித்துப்பேசும் சமயம் இதைப்பற்றி வினவினேன். "இப்பொழுது இரண்டு பிள்ளைகளே தனித் துண்கின்றனர். இவர்களும் சீர்பட்டு வந்துவிடுவார்க"ளென்று சொன்னார். சிலநாட் சென்று ஸ்ரீமகாதேவய்யர் பேசிய வார்த்தைகளிலிருந்து முன் அவர்கள் சொன்னபடி யில்லை யென்பதை அறிந்தேன். ஆகவே இதுபற்றி இருவருக்கும் பல கடிதங்கள் எழுத நேர்ந்தது. ஸ்ரீ. வ. வெ. சு. அவர்கட்கு "நீங்கள்முன் சொன்னது இப்படியல்லவா" வென்று இரண்டு மூன்று முறை வெகுவிளக்கமாக

தமிழ்க் குருகுலம்.

ஈப்போவிலிருந்து திருவாளர் பீ.சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் எழுதுவது:

எழுதிச் சேட்டும் அதற்குப் பதில்எழுதாததன் காரணம் இன்னதென்றுணர முடியவில்லை. மற்றும் இனி ஒன்றாகச் சாப்பிடுகிறவர்களைத்தான் சேர்க்கப் பெறுமென்ற யோசனையை மாற்றிக்கொண்டு விட்டதாக ஸ்ரீமகாதேவஐயர் என்னிடம் சொன்னதையும் ஸ்ரீமாந் வ. வெ. சு. அவர்கட்கு கூறியிருக்கிறேன். பதிலில்லை.

நம்நாட்டிற்குத் தகுதியுள்ளவாலிபர்களை இக்குருகுலம் ஆக்கித் தருமென்று நாங்கள் பெரிதும் நம்பியிருக்கிறோம்; அந்த இடத்தில் இவ்வித்தியாசம் இருத்தல் படாதென்று ஸ்ரீமாந் வ. வெ. சு. அவர்கட்கு பலபடியாக எழுதியிருந்தேன். பெல்காம் மகாநாடு முடிந்ததும் ஓர்சம்மேளனம் கூட்டி வித்தியாசமில்லாது முடிவு செய்வதாய்க்குறித்து, சம்மேளனத்தில் அதிக பாகத்தினர் ஒப்புக் கொள்ளா விட்டாலும், சிறுபான்மையாராகிய தாங்கள் இத்தீர்மானத்தை நிராகரித்து இவ்வித்தியாசத்தை ஒழித்து விடுவதாகப் பத்திரிகைகளுக்கு எழுதியதின் நகலொன்று எற்கு அனுப்பி யிருந்தார்கள். இனி ஒருவாறு நல்ல முடிவிற்குவருமென்றேயெண்ணிக் கொண்டிருந்தோம். இதன் மத்தியில் சம்மேளனம்கூட்டித் தீர்மானித்தாலும், தனித்துண்பவர்களுக்கு இடமிருக்கவே இருக்குமென்றும், இப்பொழுது சில பிராமணர்கள் மற்றுருடன் விதிப்பிரமாணமில்லாதிருந்துண்ணும் தவற்றை நீக்கிக் கொள்ளவே சம்மேளனம் கூட்டி துவிஜர்களாக்கி சமஸ்க்காரம் செய்யப்போகிறார்களென்றும் தான் எண்ணுவதாக ஸ்ரீ மகாதேவ ஐயர் சொல்கிறார். மற்றும் வேறு ஜாதிக்காரர் பார்க்க பிராமணர்கள் சாப்பிடுவது மதத்திற்கு விரோதமென்று சாத்திரத்தில் கூறியிருப்பதாய் வெகுதிட்டமாகச் சொல்கிறார். இன்னும் தனித்துண்ணஇடமிருப்பதே குருகுலத்திற்குப் பெருமை யென்று பேசுகிறார். இவைகள் பெரிதும் வருத்தம் தாத்தக்க செய்திகளாகும். நிற்க,

இங்கங்கே முயன்று வசூலித்து வைத்திருக்கும் நண்பர்களிடமுள்ள பணத்தை ஸ்ரீமகாதேவ ஐயர் கேட்டதற்கு ஒரு முடிவு தெரிந்ததருவதாய்ச் சொன்னார்கள். ஸ்ரீ மகாதேவ ஐயர் சிங்கப்பூரிலிருந்து ஈப்போ வந்து என்னிடம் விஷயங்களைச் சொன்னார். ஒரு முடிவு தெரிந்து அனுப்புவதே சாலுமென்று சொன்னேன். பல அன்பர்கள் பணம் கொடுக்கக் கூடாதென்று எழுதியிருப்பதையும் சொன்னேன். குருகுலத்திற் செலவிற்குப் பணம் திரும்பு முடையாக இருக்கிறதென்று சொன்னதை உத்தேசித்து ரூபா உகஙு௦க்கு உண்டியல் ஒன்று வாங்கிக் கொடுத்து, மற்றவூர்களிலுள்ளபணங்களை நீங்கள் இப்பொழுது வாங்கவேண்டாம்; முடிவு தெரிந்து வாங்கியனுப்பலாமென்று சொல்லியனுப்பப்பட்டது.

சிங்கப்பூர் போவதாகச் சொல்லிச் சென்ற ஸ்ரீமகாதேவ ஐயர், மலாக்கா சென்று அங்குள்ள பணத்தைத் தரவேண்டுமென்று கேட்டாராம்: நண்பர்கள் ஒருமுடிவின்றித் தரமுடியாதென்று சொன்னார்களாம். நீங்கள் பணம்தராவிட்டால் உங்கள் பெட்டியடியை விட்டு எழுந்து செல்லமாட்டேனென்று ஸ்ரீ மகாதேவ ஐயர் வம்பு செய்து, பணத்தைப் பெற்றுக்கொண்டு சிங்கைக்குச் சென்று விட்டார். இம்மாதிரி அக்கிரமம் நாம் எங்கும் கேட்க முடியாது. பணம் கொடுத்தவர்களுக்குப் பிடிக்காத ஒன்றை நடத்த அவர்களிடமுள்ள பணத்தைப் பெற இச்சிறுமை வழியிலிறங்குவதை ஸ்ரீமாந்மகாதேவஐயர், சாத்வீக எதிர்ப்பு என்று எண்ணினார் போலும். பாவம்! பணம்!! பணம்!!! என்ற நினைவில், என்ன செய்கிறோமென்று கூடத் தெரியாமல், தன்மையிழந்து நடந்துகொண்டது ஓர் ஆச்சரியமில்லை.

இனியுள்ள மற்றப் பணங்களை ஒரு முடிவின்றி ஸ்ரீ மகாதேவ ஐயர் என்ன வம்பு செய்தாலும் கொடுக்கமாட்டோமென்று நண்பர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே ஒரு திருப்திகரமான முடிவை

அறிவிலி ஐவன்.

ஆசிரியர் (மகாத்மா அவர்களின் குரு) கவுண்ட் லீஓ டால்ஸ்டாய்

மொழி பெயர்ப்பாளர் :—

அ. வெ. தியாகராஜா.

௪

வீரசைமனுடைய குட்டிச்சைத்தான் அன்றிரவே தன்னுடைய வேலையை முடித்துக் கொண்டு,

---

ஸ்ரீமாந் வ. வெ. சு. அவர்கள் செய்த பொதுஜனங்களுக்கு விளக்கமாகத் தெரிவிப்பார்களாக.

மலேயா தனவைசியர்கட்கு ஓர் வேண்டுகோள்.

தமிழ்க்குருகுல வித்தியாலயத்தில் சமபந்தி போஜனத்தைப்பற்றிய விவாதம் நீண்ட நாட்களாக நடைபெறுவதை நேயர்கள் அறிவார்கள். இங்கு ஸ்ரீ மகாதேவய்யர் பணம் வசூல் செய்தகாலத்தில் சமபந்திபோஜனம் ஜாதிவித்தியாசமின்றி நடத்துவதற்குக் கூடிய விரைவில் ஏற்பாடு செய்யப்படுமென்றும், இனி எவ்வித வித்தியாசமும் குருகுலத்தில் இருக்கமாட்டாதென்றும் சொல்லியதைப் பலரும் அறிவர். இம்மலேயா நாட்டிலும் செய்கோனிலும் ரிங்கி இருபதாயிரம் வரை வசூலாகி முடிந்தவுடன், ஐய்யரவர்கள் குருகுலத்தில் எப்பொழுதுமே இரண்டு பிரிவாய்த்தான் போஜனம் நடைபெறுமென்று சொல்கிறார்கள். குருகுலத்திற்குச் சேர்ந்திருக்கிற பணத்தில் பெரும்பகுதி தனவைசியர் பணமாகையால், குருகுல விஷயமாய்த் தாய்நாட்டிலுள்ள தலைவர்கள் முடிவுக்கு வந்து சமபந்திபோஜனம் ஜாதி வித்தியாசமின்றி நடைபெறும் வரையில், மலேயா தனவைசியர்களிடமுள்ள குருகுல சம்பந்தமான பணத்தை நிறுத்தி வைக்க வேண்டுகிறேன். சிங்கப்பூர் அ. மு. காரியஸ்தர் ஸ்ரீமாந் மு. காசிவிஸ்வநாதன் செட்டியாரவர்கள் மாறலிலும், பினாங்கு வயி. வீர. காரியஸ்தர் ஸ்ரீ. ராம. திருநாவுக்கரசு செட்டியாரவர்கள் மாறலிலும், ஈப்போ ஸ்ரீமாந் பிச. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் மாறலிலும் மலாக்கா பசி. லெ. காரியஸ்தர் ஸ்ரீ. ராம. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்மாறலிலும், செய்கோன் ஸ்ரீமாந் அ. உ. மெய்யப்ப செட்டியாரவர்கள் மாறலிலும் (ரிங்கி ௧௫...) ரிங்கி பதினையாயிரம் வரை குருகுல சம்பந்தமாக வசூலான பணமிருப்பதாகக் கேள்வி. மேலே எழுதியபடி தாய் நாட்டிலுள்ள தலைவர்கள் முடிவுசெய்த பிறகுதான் பணத்தைக் கொடுப்பார்களென நிச்சயமாக நம்புகிறேன். என் போன்ற அபிப்பிராயமுள்ள நண்பர்களையும் ஷேர்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

முத்து நாராயணன்.

ஐவனுடைய குட்டிச்சைத்தானிடம் ஒத்துக்கொண்டபடி அதற்கு உதவிசெய்து ஐவனை அடக்குவதற்காக வந்தது. வயலுக்கு வந்து சுற்றிச் சுற்றிப்பார்த்தது. தன் சிநேகிதனுக்குப் பதிலாக ஒரு துவாரத்தைமட்டும் கண்டது.

"நிச்சயமாக எனது நண்பனுக்கு ஏதோ துரதிர்ஷ்டம் நேர்ந்திருக்கிறது. அதன் வேலையை நான செய்யவேண்டும். வயல் உழுது முடிந்து விட்டது; ஆகவின ஐவன் அறுவடை வயலில் சிக்கவைக்க வேண்டும்" என்று வந்த குட்டிச் சைத்தான் எண்ணிற்று.

உடனே அது அறுவடையாக வேண்டிய வயல்களுக்குச் சென்றது. வெள்ளத்தை வரவழைத்து வயலகளிலெல்லாம் மண்ணை நிரப்பிவிட்டது.

குதிரைகள் மேய்ந்த இடத்திலிருந்து ஐவன் அதிகாலையில் திரும்பிவந்து அரிவாளைத் தீட்டி எடுத்துக்கொண்டு அறுப்பறுக்கச் சென்றான். அறுப்பறுக்க ஆரம்பித்து இரண்டொரு வெட்டு வெட்டினான். அரிவாள் மழுங்கிப்போயிற்று. மறுபடி வெட்ட முடியாமல் தீட்டவேண்டியதிருந்தது. ஐவன இம்மாதிரி சிறிது நேரம் கஷ்டப்பட்டு விட்டு "இது பிரயோஜனமில்லை; வீட்டிற்குச் சென்று அரிவாளை ஒழுங்குபடுத்த ஆயுதங்கள் எடுத்துவரவேண்டும். அத்தோடு சிறிது ரொட்டித்துண்டும் எடுத்து வருகிறேன். அறுப்பறுக்க ஒரு வாரமானாலும நான் இதை விட்டுப் போகப்போகிறதில்லை" என்று சொன்னான்.

குட்டிச்சைத்தான் இதைக்கேட்டதும, "அறிவிலி சரியான மோட்டா ஆள்; இந்த வழியினால் இவனைச் சரிபண்ண முடியாது; வேறு வேலைதான் செய்து பார்க்கவேண்டும்" என எண்ணிற்று.

ஐவன் திரும்பிவந்து, அரிவாளைத் தீட்டிக்கொண்டு அறுக்க ஆரம்பித்தான். குட்டிச் சைத்தான் கதிருக்குள் நுழைந்து கொண்டு, அரிவாளைக் காலால் பிடித்து முனைப்பக்கத்தைப் பூமிக்குள்ளேயே அமுக்கிற்று. அது ஐவனுக்குக் கஷ்டமாயிருந்தது. ஆனாலும சகதியாயிருந்த ஒரு சிறு பாகம் தவிரப் பாக்கி முழுவதையும அறுத்துவிட்டான். குட்டிச் சைத்தான் சகதிக்குள் நுழைந்து கொண்டு "என் கால்கள் வெட்டுப்பட்டுப் போனாலும், நான் அவனை அறுக்க விடமாட்டேன்" என்று தனக்குள் எண்ணிற்று.

சேறாய் இருந்த பக்கத்திற்கு ஐவன் சென்றான். கதிர்கள் கனமாய் இல்லாதிருந்த போதிலும் அறுபடவில்லை. ஐவனுக்குக் கோபம் உண்டாயிற்று. அரிவாளால் ஓங்கி ஒரு வெட்டு வெட்டினான். குட்டிச்சைத்தான் சற்று இடம் தரவேண்டியதாயிருந்தது. அதனால் அரிவாளை எதிர்த்து நிற்க முடியாததனால், தான் செய்வது தப்பான காரியம் என்றெண்ணி ஒரு புதருக்குள் சென்று ஒளித்துக் கொண்டது. ஐவன் அரிவாளை வீசி அதனுடைய வாலை நறுக்கிவிட்டான. கதிர் அறுத்து முடிந்ததும் அவன் கம்பறுக்கப் போவதாய்ச் சொல்லி, அறுவடையானவற்றை எல்லாம் ஊமைப் பெண்ணைக் கட்டும்படி சொன்னான். பிறகு அரிவாளுடன் அவன் புறப்பட்டான். வாலறுந்த சைத்தான முன்னதாகவே சென்று கம்பங்கதிரைச் சுற்றக் கொண்டுவிட்டபடியால், அரிவாள் பிரயோஜனப்படவில்லை. ஐவன் வீட்டிற்குச் சென்று கருக்கரிவாளை எடுத்து வந்து அறுவடையை ஆரம்பித்து முடித்துவிட்டான.

"இனி சோளக்கதிர் அறுக்க வேண்டும்" என்று சொன்னான். வாலறுந்த குட்டிச சைத்தான இதைக் கேட்டுக் "கம்பங்கொல்லையில் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை; சோளக் கொல்லையில் பார்த்துக் கொள்ளுகிறேன். விடியும்வரை மட்டும் காத்திருக்க வேண்டியதிருக்கிறது. பாதகமில்லை" என்று நினைத்தது.

விடிகாலையில் குட்டிச் சைத்தான வேகமாய்ச் சோளக்கொல்லைக்கு ஓடிற்று. ஆனால் முன்னமேயே சோளமெல்லாம் அறுவடையாகிவிட்டது. அதிக தானியம் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டியதற்காக ஐவன் இரவே அவைகளை அறுத்து விட்டான். குட்டிச்சைத்தானுக்குக் கோபம் அதிகரித்தது.

"அறிவிலி என்னை உடம்பெல்லாம் வெட்டிவிட்டான்; என்னைக் களைக்கடித்து விட்டான். இது ஒரு யுத்தத்தைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறது. இந்த மக்கு தூங்குகிறானில்லை. அவனுடன் ஒருவராலும் விழித்திருக்க முடியாது. அவனுடைய போருக்குள் சென்று எல்லாவற்றையும் குட்டையாக்கி விடுகிறேன்" என்று அந்தச் சைத்தான் தீர்மானித்துக் கொண்டது.

அப்படியே அது கம்பம் போருக்குள் சென்றதும் கதிர்த்தாள்கள் கெட ஆரம்பித்தன. அவைகளில் குளிர்காய்ந்து விட்டுச் சைத்தான் அதன் மேலேயே படுத்துறங்கிற்று.

ஐவன் வண்டியைக் கட்டிக்கொண்டு அப்பெண்ணுடன் கம்பங்கதிரை அள்ளிவரச் சென்றான். அவன் போரை அடுத்துக் கதிரை வண்டியில் ஏற்ற ஆரம்பித்தான். இரண்டு தடவை வண்டியில் அள்ளிப்போட்டான். மூன்றும்தடவை அள்ளுவதற்காகக் கம்பைக் கீழ்க் குத்தியவுடன் கம்பின் முனை குட்டிச் சைத்தான் முதுகில் நன்றாய்ப் பாய்ந்து கொண்டது. கம்பை உயரத்தூக்கிப் பார்க்கும் பொழுது குட்டிச் சைத்தான் கம்பிலிருந்து தப்பித்துச் செல்வதற்காகக் கால் கைகளை ஆட்டிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது.

ஐவன்:— என்ன? ஆபாசமே. மறுபடியும் நீ வந்து விட்டாயா?

குட்டிச் சைத்தான்:— நான் வேறு. முன் வந்தது எனது சகோதரன். நான் உன் சகோதரன் சைமனிடமிருந்து வந்தேன்.

ஐவன்:—நீ யாராயிருந்தாலும் உனக்கும் அதனுடைய முடிவுதான்.

இதைச் சொல்லிக் கொண்டே அதை அவன் வண்டியில் மோதச் சென்றான். அப்பொழுது அது, "என்னை விட்டுவிடு; மறுபடியும் அதைச் செய்யமாட்டேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்" என்றது.

ஐவன்:—உன்னால் என்ன செய்யமுடியும்?

குட்டிச்சைத்தான்:—நீ எதை விரும்புகிறாயோ அதிலிருந்து சிப்பாய்கள் செய்யமுடியும்.

ஐவன்:—ஆனால் அவர்களால் என்ன பிரயோஜனம்!!

குட்டிச்சைத்தான்.—அவர்களை நீ எதற்கு வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளலாம். அவர்கள் எதையும் செய்வார்கள்.

ஐவன்:—அவர்கள் பாடுவார்களா?

குட்டிச்சைத்தான்:—ஆஹா!

ஐவன்:—நல்லது செய் பார்ப்போம்.

அப்படியே குட்டிச்சைத்தான் ஒரு நெல் கதிரை எடுத்துத் தரையில் நேரே நிறுத்தியது. பிறகு ஒரு மந்திரத்தைச் சொல்லி "இதைச் சொல்லு" என்றது. அப்படி ஐவன் சொன்னான். உடனே கொம்பு கிடுகிட்டிகளுடன் ஒரு சிப்பாய் தோன்றினன்.

ஐவன் சிரித்தான்.

"இது புத்திசாலித் தனந்தான்; இது நல்லது. பெண்களெல்லாம் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள்" என்று அவன் சொன்னான்.

குட்டிச்சைத்தான்:— இப்பொழுது என்னைப் போகவிடு.

ஐவன்:—இல்லை; தான்யம் கெட்டுப் போய்விடுமாகையால் நான் சிப்பாய்கள் வைக்கோலில் தான் செய்ய வேண்டும். மறுபடியும் அவைகளை எப்படி வைக்கோலாக்குவது என்பதையும் கற்றுக்கொடு; நான் போரடிக்கவேண்டும்.

குட்டிச்சைத்தான், "மந்திரத்தை இப்படித் திருப்பிச் சொல்" என்று ஒன்றைக் கற்றுக் கொடுத்தது. ஐவன் அப்படியே சொன்னான். உடனே சிப்பாய் கதிராக மாறிவிட்டான்.

மற்றொருமுறை குட்டிச்சைத்தான் தன்னைப் போகவிடும்படி ஐவனைக் கெஞ்சிக்கேட்டது.

ஐவன் அதைக்கம்பின் நுனியிலிருந்து எடுத்து, "நல்லது போ, உன்னைக் கடவுள் காப்பாற்றுவாராக" என்றான். கடவுள் என்று சொன்னமாத்திரத்தில்தண்ணீரில் எறிந்த கற்போலக் குட்டிச்சைத்தான் பூமிக்குள் சென்று விட்டது. அவ்விடத்தில் ஒரு பொந்து மட்டும் இருந்தது.

ஐவன் வீட்டிற்குத் திரும்பிவந்தான். ஆங்கே அவனுடைய மற்றொரு சகோதரன் அவன் மனைவியுடன் போஜனம் அருந்திக்கொண்டிருந்தான்.

டாராஸ் கடன்காரர்களுக்குக் கடனைச் செலுத்த முடியாமல் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு தகப்பனிடம் ஓடிவந்து விட்டான். அவன் ஐவனைப்பார்த்தவுடன் "இங்கே பார் தம்பி! நான் மறுபடி வியாபாரம் ஆரம்பிக்கும் வரை என்னையும் எனது மனைவியையும் இங்கேயே வைத்துக்கொள்" என்றான்.

ஐவன் "நல்லது இங்கேயே இருங்கள்" என்றான்.

சொன்னபிறகு சட்டையைக் கழற்றிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான். ஆனால்-வியாபாரியின் மனைவி "இவனிடம் வியர்வை நாற்றம் அதிகமாயிருக்கிறது. இவனுடனிருந்து நான் சாப்பிட்முடியாது" என்றாள்.

டாராஸ்:—ஐவன்! உன்னிடமிருந்து அர்நாற்றம் அடிக்கிறதாம். நீ வெளியில்போயிருந்து சாப்பிடு

ஐவன் "நல்லது; எப்படியும் குதிரைகளை மேயவிடுவதற்காக நான் வெளியில் போகவேண்டும்" என்று சொல்லிச் சில ரொட்டிக் துண்டுகளை எடுத்துக் கொண்டு வெளியில் போய்விட்டான்.

(தொடரும்)

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் சங்கம் இரங்கூன்.

சென்னைக் கப்பல்களில் நம்மவர்க்கு வசதி.

அன்பார்ந்த ஐயன்மீர்!

சென்னைக் கப்பல்களில், நம்மவர்களுக்கு நீண்ட நாட்களாக பல அசௌகரியங்களிருந்து வருகின்றன. [illegible] அறிந்ததுவே. அதன்பொருட்டு [illegible] நாட்டில் "நம்மவர்கட்குக் கப்பல் [illegible] பிரயாண [illegible] அசௌகரியங்களை [illegible] கம்பெனிக்காரர்களுக்கு நமது சங்கக் காரியதரிசி தெரிவித்து வேண்டுவன செய்யவேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது" எனத் தீர்மானிக்கப்பெற்றதற்கிணங்க, [illegible] நமது காரியதரிசி பி. ஐ. என். என். கம்பெனி காரியஸ்தரிடம் சென்று, சென்னைக் கப்பலில் நம்மவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை விளக்கித் தெரிவித்தார்கள். அவர்கள் அவ்விஷயங்களை அன்புடன் ஏற்றுக் கீழ்க்கண்டவைகளுக்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சந்தோஷத்துடன் உங்கள் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

௧. பிரயாணிகளின் சாமான்களைக் கொண்டுபோவதற்கு பிரவேசச் சீட்டுடன் சேர்த்துக் கூலியும் வாங்கிக்கொள்வதால், பாலத்தடியிலுள்ள கூலிகள் பிரயாணிகளிடம் ஒரு பைசாவும் பெற்றுக் கொள்ளாமல் சாமான்களை எடுத்துப் போகக் கட்டளைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரயாணிகளிடம் மரியாதையாகச் சட்டப்படி நடந்துகொள்ள வேண்டும்.

௨. பெரிய சாமான்களைத் தவிரச் சிறிய சாமான்கட்கெல்லாம் கப்பற் கூலி விதித்தல் கூடாது.

௩. மூன்றாவது வகுப்புக் கக்கூஸ்கள் மிக அசுத்தமாயிருக்கின்றன. இனி அடிக்கடி கழுவிச் சுத்தமாய் வைத்திருக்கப்பெறும்.

௪. இப்பொழுது கப்பல்களிலிருக்கும் அடுப்பு சோற்றுக் கடைக்காரர்களாலும் இரா ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரயாணிகளாலும் உபயோகப்படுத்தப் பெற்றுவருகின்றன. நம்மவர்கள் சமையற்செய்து சாப்பிட மிகக் கஷ்டப்படுகின்றனர். பொருள் செலவுசெய்தாலும் சாப்பாடு வசதி ஏற்படவில்லை. இனி நம்மவர்க்கென ஓர் தனி அடுப்பு ஏற்படுத்தித் தரப்பெறும்.

௫. இவ்விஷயங்களை அமுலுக்குக் கொண்டுவரவும் நமது பிரயாணிகளின் சௌகரியங்களைக் கவனித்துவரவும் சங்கத்தாரால் ஓர் பிரதிநிதி ஏற்படுத்திவைக்கப்பெறும். அவர் தெரிவித்துக்கொள்ளும் குறைகளையெல்லாம் பி. ஐ. என். என். கம்பெனிக்காரர்கள் அப்பொழுதைக்கப்பொழுது நிவர்த்திப்பார்கள்.

அன்பர்களே!

௧௯—௧—௨௫-ல் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தன்று ஸ்ரீமான் வெ. சக்க. முதலியாரவர்களை நம்மவருக்குக் கப்பலில்

வேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுப்பதற்காக நமது சங்கப்பிரதிநிதியாக நியமித்துள்ளார்கள். அவர் ஒவ்வொரு நாளும் காலை க-மணி முதல் கூ-மணி வரையிலும் மாலை ந-மணி முதல் ச-மணி வரையிலும் நமது சங்கத்தில் வந்திருப்பதோடும் சென்னைக் கப்பல் காலங்களில் பாலத்தடியிலும் வந்திருப்பார். (சென்னையிலிருந்துவரும் கப்பல்கட்கும் சென்னைக்குப்புறப்படும் கப்பல்கட்கும்) முதலாவது இரண்டாவது வகுப்பு டிக்கெட்டு வேண்டுபவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னமேயும் மூன்றாவது வகுப்பு டிக்கெட்டுகள் வேண்டுபவர்கள் இரண்டு நாட்கள் முன்னமேயும் சங்கத்திற்குத் தெரிவித்தால் டிக்கட்டுகள் வாங்கிக் கொடுக்கப்பெறும்.

நமது சங்கப் பிரதிநிதியிடம் கப்பல் புறப்படுவதற்கு முதல்நாள் பிற்பகல் மூன்றுமணிக்கு ஸ்பார்க்தெரு பாலத்தடிக்கு விலையுயர்ந்த சாமான்களைத் தவிர கையில் கொண்டுபோகமுடியாத பெரிய சாமான்களையெல்லாம் அனுப்புதல்வேண்டும். அவைகளையும், கப்பல் புறப்படும் தினத்தில் பாலத்தடிக்குக் கொண்டுவருகிற இதர சாமான்களையும் கப்பலில் ஏற்றித் தருவார்கள். சென்னையிலிருந்துவருபவர்கள் கப்பலுக்குள் வந்திருக்கும் நமது சங்கப் பிரதிநிதியிடம் அவரவர்களின் சாமான்களை ஒப்புவித்துவிட்டால் அவரால் பாலத்தடிக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பெறும்.

சென்னையிலிருந்து வருகிற கப்பல்கட்கு பாலத்திற்கு அவசியமாய்ப்போக வேண்டியவர்கள் சங்கத்திற்கு வெள்ளிக்கிழமையே தெரிவித்தால் உள்ளே போவதற்கு அனுமதிச்சீட்டு வாங்கித் தரப்பெறும். (ஞாயிற்றுக்கிழமையும் சில சமயங்களில சனிக்கிழமையும் அரசாங்கவிடுமுறையாதலால் வெள்ளிக்கிழமையே தெரிவித்தல் வேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கிறது)

சென்னைக்கப்பல் வந்து சேருங்காலமும் புறப்படுங்காலமும் சங்கத்தின் விளம்பரப் பலகையில் குறித்துவைக்கப்பெறும். ஆகையால் அநாவசியமாய் ஒவ்வொருவரும் கப்பல்வந்து சேருங் காலத்தைக் குறித்துத் தந்திக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

பிரயாணிகட்கு இதர எவ்வித அசௌகரியங்கள் ஏற்பட்டாலும் சிரமங்கருதாது பாலத்தடியிலுள்ள சங்கப் பிரதிநிதிக்குத்தெரிவித்தால், அவ்விதம் ஏற்படுங் குறைகளை நீக்குவதற்கு வேண்டுவன செய்யப்பெறும்.

மெ. அரு. அரு.
சோமசுந்தரச் செட்டியார்
கௌரவகாரியதரிசி
இரங்கூன்.
உஅ—க—உரு.

பிறநாட்டுச் செய்தி

ஸோவியத் ருஷ்யாவின் யுத்த மந்திரி ஸ்தானத்தை ஸ்ரீமான் ப்ரன்ஸி ஏற்றுக்கொண்டார்.

* * *

புதிய எம்டன் கப்பலொன்றை ஜர்மனியில் கட்டிமுடித்துக்கடலில் வெள்ளோட்டம் விட்டனர்.

* * *

துருக்கிக்கும் பிரான்ஸுக்கும் சினேக சம்பந்தமான உடன்படிக்கை திருப்திகரமாக ஏற்பட்டிருக்கிறது.

* * *

ருஷியாவுக்கு இங்கிலாந்திலிருந்து இரஹஸியமாக ருசு-இயந்திரப் பீரங்கிகள் ஏற்றுமதி செய்யப்பட்ட முயற்சி வெளிப்பட்டதாம்.

* * *

டப்ளினிலிருந்து நடந்து வந்த "ப்ரீமன்ஸ் ஜர்னல்" என்னும் பத்திரிகை ககூக-வரு நடந்துவந்த பிறகு சென்ற டிசம்பரில் நின்று விட்டது.

* * *

இந்தியக் கிராமங்களின் நிலைமையைப் பற்றி விவரிக்க ஒரு ராயல் கமிஷன் ஏற்படுத்துவதில் லார்ட் பர்க்கன் ஹெட் அதிக ஊக்கங்காட்டி வருகிறார்.

* * *

துருக்கியிலிருந்து ஆயிரம் (பேல்) கட்டுப் பருத்தி மான்செஸ்டருக்கு அனுப்பப் பெற்றிருக்கிறது. அப்பருத்தி இந்தியப் பருத்தியைக் காட்டிலும நயமாயிருக்கிறது.

* * *

அமெரிக்காவில் மதுவிலக்கு முயற்சியின் பயனாக க,அ0,000 சாராயக் கடைகள் மூடப்பெற்றன. அதனால், கொலை களவு நோய் முதலியன குறைந்து வருகின்றன.

* * *

ஜனங்களின் ஒழுக்க நிலை பண்படுதற்காக மகாத்மா காந்தி அதிக வேலை செய்திருக்கிறாரென்று ஸ்ரீமான் பிலிப்கெர் என்பவர் லண்டன இந்திய மாணவர் சங்கத்திற் சொன்னார்.

* * *

சீனவுக்கு யுத்த தளவாடங்கள் ஏற்றுமதி செய்யக்கூடாதென்றும் அவ்வேற்றுமதியைத் தடைசெய்ய வேண்டுமென்றும், சீனவின் அமைதிக்காகவே இது செய்யப்படுறதென்றும் ஆங்கிலக் கட்சி சொல்லுகின்றது.

வைசியநாட்டுச்செய்தி

கூழிபிறைச்சிவனடியார் திருக்கூட்டம்.

நச்சாந்துபட்டிக் கரு. கா. மை. மீதுள்ள மலையக்கோவிலில் தைப்பூசத்தன்று இத்திருக் கூட்டத்தினர்களால் பல இன்னிசைக் கருவிகளோடு ஜீவகாருண்யபஜனைகள் செய்து முடிந்ததும், மாணவன் வீர. பழ. சுப்பய்யா என்பவன் கொல்லாமை என்னும் விஷயம் சொற்பெருக்கிட ஏராளமான துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பெற்றன என்று உப. தலைவர் ச. கரு. நாகப்ப செட்டியார் எழுதுகிறார்.

* * *

தேவகோட்டை.

வரிவசூல் காரியாலயம் பத்திரப் பதிவுக் காரியாலயம் முதலியன ஆற்றுக்கு அப்பால் போய்விட்டதால், பொது மக்கள் மிகக்கஷ்டமுறுகிறார்களாதலால், அதுபற்றியும் கஜானா இந்நகரக்கு இன்றியமையாததால் அது பற்றியும் ஸ்தலஸ்தாபன சபையார் தேர்தல் பட்டியலைத் திரிதமாய் தயாரித்து உரிய காலத்தில் தேர்தல்நடத்தவேண்டியது பற்றியும் பஞ்சாயத்துக்கோர்ட்டுத் தேர்தல் சம்பந்தமாயும் ஆலோசிக்கும் பொருட்டு இந்நகரவாசிகளின் பொதுக்கூட்டமொன்று இரக்தாட்சி ஞூ மாசிமீ கசஉ (உஉ-உ-உரு) ஞாயிற்றுக்கிழமை காலை கூ-ந0 மணிக்கு வெள்ளையனூருணிக்குக் கீழ்புரம் பிள்ளையார் கோவிலுக்கு எதிரிலுள்ள திடலில் கூடுகிறது என்று விவேகாநந்த புத்தகசாலையார் பத்திரிகை மூலம் தெரிவிக்கிறார்கள்.

* * *

சொக்கலிங்கம் புதூர்.

மணிவாசக மாணவர் சங்கம் ரக்தாக்ஷி ஞூ தைமீ உஉக ஞாயிற்றுக்கிழமை மாலை ச மணிக்கு ஸ்ரீமாணிக்கவாசக வித்தியாசாலையின்கண் கூடி, டெ வித்தியாசாலையின் உதவி ஆசிரியர் பிரம்மஸ்ரீ சு. ந. நரசிம்ம ஐயரவர்கள் தலைமை வகிக்க, மாணவர்கள் தெய்வமிகழேல், கொல்லாமையே சிறந்த தருமம், ஆடு வெட்டுவது சுவாமிக்கா? எல்லா இடத்தும் கொலை தீது என்னும் விஷயங்களையும் சு. மு. சொ. திருவெண்காடன் பெண்கல்வி என்னும் விஷயத்தையும் பழ. ப. நாராயணன் சிந்தனையும் செயலும் என்பதைப்பற்றியும் சண்முகசாமி அவர்கள் வெள்ளையானை சாபம் தீர்த்த படலத்தைப்பற்றியும் உபந்யாசம் செய்தார்கள். தலைமையாசிரியரவர்கள் உபந்யாசங்களின் சாரங்களை விரித்துக்கூறிய பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் இனியமுடிவுரை கூறினார்கள். கடவுள் வாழ்த்து கூறியபின்னர் எ-மணிக்குச் சபை இனிது நிறைவேறியது என்று மணிவாசகன் எழுதுகிறார்.

உள்ளூர்ச் செய்தி.

சென்னை உண்டியல் வட்டம் 0-சு-0
கோகூன் உண்டியல் வட்டம் க-சு-0

திருக்குறட் கழகம்.

இக்கழகத்தின் கந-வது கூட்டம் நாளிது மாசிமீ ச ஞாயிற்றுக்கிழமை வழக்கம்போல் ஹிந்துமதாபிமான சங்கக் கட்டிடத்தில், திருவாளர் மெ. வே. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்கள் தலைமையில் கூடியது. சொற்பொழிவாளர்கள், சா. நா. சா. அருணசலச் செட்டியாரவர்கள், "வாழ்க்கைத்துணை நலம்" எனும் அதிகாரத்தின் பிற்பாதியாகிய ஐந்து பாசுரங்களையும்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அவ்வப்பொழுது ஒவ்வொரு பாசுரமும் அங்கத்தினர்களால் விவாத முறையில் ஆராயப்பட்டது. முப்பத்தைந்து பெயர்களுக்குமேல் அன்பர்கள் வந்திருந்தார்கள். அடுத்த வாரம் கக-உ அன்று, "புதல்வரைப் பெறுதல்" என்னும் அதிகாரத்தைப்பற்றித் திருவாளர் ஆர். நாராயண ஐயர் அவர்கள் சொற்பொழிவு செய்வார்கள். நாளிது மாசிமீ உஅஉ அன்று திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவதாகவும்; ஓர் ஆராய்ச்சியாளரைக் கொண்டு சொற்பொழிவு நிகழ்த்துவிப்பதாகவும் நிச்சயிக்கப்பட்டது. கழக வளர்ச்சியின் பொருட்டு, ஈப்போவிலிருந்து தமிழபிமானச் செல்வர்களாகிய திருவாளர்களான, அமராவதிபுதூர் பி.சு. சுப்பிரமணியச் செட்டியாரவர்கள் ரூபா சரு—க—உ-ம், காரைக்குடி நா. ராம. சித. வேங்கடாசலச் செட்டியாரவர்கள் ரூ. கரு-க-உ-ம், கொடியூர் நா. இராமசாமிச் செட்டியாரவர்கள் ரூ. எ-கஉ-எ-ம் கல்லுப்பட்டி ராம. கருப்பன் செட்டியாரவர்கள் ரூ. எ-கஉ-எ-ம் ஆக ரூபா சசு-கக-சு அதாவது ந0 வெள்ளிகள் அனுப்பியதற்காக அவ்வன்பர்களுக்குக் கடிதம் மூலம் நன்றியறிதல் அறிவிக்கும்படியாகத் தீர்மானிக்கப்பெற்றது என்று காரியதரிசி அரு. சோமசுந்தரச்செட்டியார் அறிவிக்கிறார்.

மாகாணாதிபதி வருகை.

சென்னை மாகாணாதிபதி, கோஷன் பிரபு, நாளை (மாசி எஉ) பகல் கக-கரு க்குக் கானாடுகாத்தான்வந்து, ஸ்திரீகள் குழந்தைகள் வைத்திய சாலையைத் திறந்து வைத்து, அங்கு அன்று தங்கி மறுநாள் (மாசி அஉ) காலை பள்ளத்தூர் வந்து வைத்தியசாலையைப் பார்வையிட்டு, உபசாரப்பத்திரமும் விருந்தும் பெற்றுப் பிறகு, இவ்வூர் வந்து ஸ்தலஸ்தாபனச் சபையாரின் உபசாரப்பத்திரம் பெற்றுப் பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டுப் பகல் கஉ-மணிக்குத் தேவகோட்டை புறப்பட்டு, அங்கு ஸ்தலஸ்தாபனச் சபையாரின் உபசாரத்தைப்பெற்று மாலை சிவகங்கை புறப்படுவார்.

சுகாதார அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று இரவு எ-மணிக்கு சிவன் கோவில் மேலவீதி ராமசாமி அய்யர் வீட்டில் கூடியது. ஸ்ரீமான்களான எஸ். இராமசாமிச் செட்டியாரவர்களும் ஆர். நாராயணய்யரவர்களும் புதுவரு-

தந்திச் செய்தி.

பினாங்கு மாசிமீ நஉ

சென்னை உண்டியல் விலை நூற்று ஐம்பத்தைந்து
ஈயம் விலை ஐம்பத்தைந்து
ரப்பர் விலை எண்பத்து மூன்று

இரங்கூன் மாசிமீ ருஉ

பட்டுநெல்	கஎஎ—0—0
புகையிரத நெல்	கஎஉ—0—0
இயந்திர அரிசி பெரிது	சஅரு—0—0
டிெ சிறிது	சருஉ—0—0
தீட்டற் புழுங்கலரிசி	ருஉரு-0-0
நசேன் புழுங்கலரிசி	சஎரு-0-0
நீளப்புழுங்கலரிசி	ருஉ0-0-0
எ ஒன் தருணை	சசரு-0-0
பி ஒன் குருணை	சந0-0-0
உழுந்து	நக0-0-0
தட்டைப்பயறு	சஅ0-0-0
வெள்ளைத் தட்டைப்பயறு	நஅ0-0-0
பாசிப்பயறு	ச00-0-0
மொச்சை	ந00-0-0
முத்துச்சோளம்	உஎரு-0-0
காசுக்கட்டி	கஉ0-0-0
தங்கம்	கரு-0-0
வெள்ளி	எரு-0-0
டாலர்	ருஅ-0-0
பவுன்	கச-ந-0
தவணைவட்டி	0-கரு-சு

பணம் பிரியம்.

இரங்கூன் மாசி நஉ

இரங்கூன் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கச் சார்பில், செட்டியார் உயர்தர வித்யாசாலையில் ஒரு ஜனத்திரளான கூட்டம் கூடிற்று. மேன்மன்ற விசாரணைகள் நடந்தேறின. அம்மேல் மன்றத்துக்குச் சிவபெருமான் நீதிபதியாகவும், பிரம்மாவிஷ்ணு சுப்பிரமணியர் விநாயகக் கடவுளிவர்கள் ஜூரிகளாகவும் இருந்தார்கள்; உருக்கமான உபந்யாஸங்கள் ஸ்ரீமான்களான, சொக்கலிங்க ஐயா, ராமசந்திர ஐயர், சிவத்யானாநந்த மஹரிஷி, பத்மநாபராஜு, அ. ப. சொ. சோமசுந்தரச் செட்டியாரிவர்களால் நடைபெற்றன. இளைஞர்களின் பக்தி பரவசமான பாட்டுகளுடன் ஸபை நிறைவெய்தியது என்று காரியதரிசி தெரிவிக்கிறார்.

இரங்கூன் மாசி ருஉ

ஸ்ரீமான் மெ. அரு. அரு. சோமசுந்தரச் செட்டியாரவர்களிடமிருந்து:—

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் நிர்வாஹக் கூட்டமொன்று, கரு-உ-உரு ஞாயிற்றுக்கிழமை கூடியது. எறக்குறைய எல்லா அங்கத்தினரும் விஜயம் செய்

டக் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். ஸ்தலஸ்தாபனத் தேர்தல் சம்பந்தமாய் அபேக்ஷகர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு வாக்குப்பெற முயற்சி செய்வதுடன் இன்னும் அது சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் எல்லா அங்கத்தினர்களின் உதவியையும் பெற்று வேலை செய்வதற்கு கூ-பேர் அடங்கிய கூட்டம் ஒன்று நியமிக்கப்பெற்றது. இன்னும் விவரம் பின்னேவரும்.

திருந்தார்கள். தலைவர் ஸ்ரீமான் சா. அ. ராம. சாமிநாதச் செட்டியாரவர்கள் தலைமைவகித்தார்கள். காரியதரிசியவர்களால் சென்ற கூட்டத்து நடவடிக்கைகள் படிக்கப்பட்ட பின்னர் சென்ற மாதத்து வரவு செலவுக் கணக்குகள் படிக்கப்பட்ட அவை அங்கத்தினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப் பெற்றன.

ஈப்போ மாசிமீ ௨உ

மலேயாவில் அபிவிருத்திக்கும் பொருட்டுச் சேகரித்திருக்கும் [illegible] விஷயமாக இந்தியாவிலிருந்து [illegible] தீர்மானம் [illegible] ஜெயிக்கப்பட்டதென்ற தீர்மானத்தை மலேயா செட்டியார் சங்கம் நிறைவேற்றியிருக்கிறதென்று காரியதரிசி அறிவிக்கிறார்.

சென்னைமாசிமீ ரு-உ

பவுன் விலை ரூ. கச 0 க
வெள்ளி விலை ரூ. 0 கஉ 0

கப்பற்செய்தி.

தாரா என்னும் கப்பல் கிழமை மாசி நந-உ செவ்வாயன்று சென்னை வந்து மறுநாள் சிங்கப்பூர் புறப்படும்.


ஒரு பண்டிதர் மரணம்

இராமநாதபுரம் புதுக்கோட்டை முதலிய அரசாங்கங்களில் பொற்பரிசு பெற்றவரும், தனவைசிய நாடுகளில் பிரசித்தி பெற்றவரும், (கடியாபட்டி) இராமச்சந்திரபுரம் ஸ்ரீபூமீசுவர உயர்தரக் கலாசாலையில் கூ ஆண்டுக் காலம் உபாத்திமைப் பணிபுரிந்து, பின்னர், திருமெய்யம் தர்ம பூஷணம் தீ. ஸ. மு. அவர்கள் மத்தியதரக் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடத்தியவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீக்ஷகராயிருந்தவருமான இயலிசைத் தமிழ்ப் புலவர் ஸ்ரீமான் கெவிலை திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்கள் கிழமை பிப்ரவரி அ-உ இரவு கக-மணிக்குத் தேகவியோகமாயினர் என்பது கேட்டு வருந்துகிறோம்; பண்டிதர் குடும்பத்தினர்க்கு எமது அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

சாற்றவினை.

கண்டவராயன்பட்டி திருவாளர் சுப. அ. சுப்பிரமணியச்செட்டியாரவர்கள், அவர்கள் புதல்வி சௌந்திரம் காப்புக்கட்டுப் புதுமையில், நம் தனவைசிய ஊழியர் சங்கத்துக்கு ரூ. ரு (ஐந்து) சம்பாவனை செய்துள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

காரியதரிசி
தனவைசிய ஊழியர் சங்கம்



நாளென் செயும்! வினை தானென
செயும்! எனை நாடிவந்த
கோளென் செயும்! கொடிய கூற்றென்
செயும்! குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையும் ஷண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

தனவைசிய ஊழியன்
காரைக்குடி. மாசிமீ ௯

ஏமாற்றம்! ஏமாற்றம்!!

நாம் அலட்வது யாவும் இப்பொழுது ஏமாற்றமாகவே யிருக்கின்றன. ஏமாற்றப் பொருள் பதிகுஞ் கருத்துடையார் அனைவரும் நம் தனவைசியப் பெருமக்களே. நாடாகிய இந்நாட்டிலும் நம்மவர் வாழும் பிறநாடுகட்கும் சென்று கூசாது தஞ் செயல் புரிவதைப் பலபடியினும் கண்கூடாகக் காண்கின்றோம்.

நம்மவர் அறங்கள் பல ஆற்றுகின்றனர். அவற்றுள் ஏமாற்றத்தால் நடைபெறுவனவே மிகுதியும் இருக்கின்றன. இதனால் நம்மவரை நாம் இழிவு படுத்துகின்றோமென்று எவரும் கருதுதல் ஆகாது. பிறரால் நயவஞ்சகமாக ஏமாற்றப் பெறுகின்றார் நம்மவர். நம்மவர், எவரேனும் வடமொழியில் தெரிந்தோ தெரியாமலோ எதையேனும் இரண்டைச் சொல்லி, 'செட்டியாரவாள்! பிராமணாள் காரியம்; ரொம்பப் புண்ணியமுண்டு; செய்யுங்கோ." என்று சொன்னவுடன் "சரி; அப்படியே ஆகட்டும்" என்று கூறிவிடுகின்றனர். நம்மவர் பிற வியாபார காரியங்களில் பெரிதும் அறிவுபடைத்தவர்களே யெனினும், இவ்வகைப் [illegible] ஆராய்ச்சி [illegible] இவர்கள் [illegible] நம்மவர் [illegible] புண்ணியத்துக்கும் [illegible] போவது! [illegible] காணவில்லையே!! நம்மவர் [illegible] வயிறு [illegible] பழந்தமிழ் [illegible] அந்தோ! [illegible] நம்மவர் [illegible] [illegible] இல்லை.

தமிழ்க் குருகுலம் என்று ஒன்று சேரமாதேவியில் இருக்கின்றது. அதனை நடத்துபவர்கள் திரு. வ. வெ. சு. ஐயரவர்கள். [illegible] குருகுலத்தைப்பற்றி [illegible] உயர் மக்கள் [illegible] ஒருநாள் [illegible] இருக்கவில்லை. வரவர [illegible].

அக் குருகுலத்திற்குத் திருநெல்வேலி ஜில்லா வாசியாகிய திரு. தி. ரா. மகாதேவ ஐயரென்பவர் உதவியாசிரியரென்று கூறுகின்றார்கள். அந்நியாய வாதி குருகுலத்திற்குப் பணந்திரட்டிக் கொண்டு வருவதற்காக மலாய்நாடு சென்றார். சென்று பல மாதங்களாயின. இன்னும் அங்கு தான் வதிகிறார். நமது பேரன்பர்களின் பெருந்துணை கொண்டு ஒல்லும்வகை பணந்திரட்டி விட்டார். ஏறக்குறைய முப்பதாயிரம் ரூபாய்க்கு மேல் சேகரித்திருக்கிறாரென்று சொல்லப்படுகிறது. இதில் மிகப் பெரும்பகுதி நமது தனவைசியர்களதே.

பணம் பெறுமுன் அவர் இருந்த நிலையும் பேசிய பேச்சும், பணம் பெற்ற பின்னர் அவர் அடைந்த நிலையும் அறையும் மொழியும், இவ்வார ஊழியனில் வெளிபோந்திருக்கும் நமது ஆருயிர் அன்பர் திரு. சுப்பிரமணியச் செட்டியாரவர்கள் கட்டுரையாலும் மற்றொரு அன்பர் முத்து நாராயணன் அவர்கள் வேண்டுகோளாலும் அன்பர்கள் அறிதலாகும். அப்பகுதியில் பணம் சேகரிப்பதற்கு முக்கிய காரணராயிருந்தவருள் முதன்மை பெற்றவர் இன்று அதுபற்றிக் கட்டுரை வரைந்திருக்கும் வாய்மையும் ஒழுக்கமும் வாய்க்கப்பெற்ற நமது சுப்பிரமணியச் செட்டியாரவர்களே என்பதை அன்பர்கட்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

அத்தகையோர்க்குத்தான் திரு. வ. வெ. சு. ஐயரவர்கள் ஒரு கடிதங்கூட எழுத வில்லையாம். ஒன்றுஞ் செய்யா நமக்குக்கூட சம்மேளனங் கூட்டவேண்டு மென்றும் பிறவும் எழுதும் ஐயரவர்கள், கடலுக்கு அப்பாலிருந்தும் குருகுலத்தில் நாட்டஞ்செலுத்தி வேண்டுவ செய்துவிட்டு, தம்மிடம் ஒருவிதமாகச் சொல்லிப் பணஞ் சேகரித்த ஒருவர் வேறு விதமாயதைக் கண்டு வருந்தி, திரு. ஐயருக்குக் கடிதமெழுதிவிட்டு எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் அன்புருவாய ஒருபெரியாருக்குக்கடிதங்கூடஎழுதாமையை என்னென்றியம்புவது! நிற்க, திரு. மகாதேவ ஐயரவர்கள் ஆண்டுப் புரியும் திருவிளையாடல்கட்கு அளவில்லையாம். இன்றொன்று சொல்வதும் நாளையொன்று சொல்வதும் ஒருவரிடம் ஒன்று சொல்வதும் மற்றொருவரிடம் வேறொன்று சொல்வதும் மிக அழகாக வருகின்றன. பேஷ்! குருகுலத்திற்கு நல்ல உதவியாசிரியர்! இப்படியாசிரியர் குருகுலத்தில் எத்தனைபேர் இருக்கின்றனரோ யார் தெரியவில்லை? ஒவ்வொருவர் நிலையுஞ் செயல் நிகழ்ந்தபொழுதுதான் தெரியும். ஆனால் பலர் வேண்டாம்! ஒருவர் இருந்தாலே ஒழுங்குக்கு வந்துவிடும். கடற்புற நாடுகட்குச் சென்று பொருள் திரட்டிவரும் ஆற்றல் வாய்ந்தவரென்று குருகுலத்திற்குப் பிரதம உதவியாசிரியர் [illegible] உரியவரென்றும் திரு. வ. வெ. சு. ஐயரவர்களால் மதிக்கப்பட்ட மகாதேவ ஐயரவர்கள் செயல் இவ்வாறானால், மற்றவரைப் பற்றிக் கேட்பானேன்? இவ்வாறு பொதுக் காரியம் படிப்போர்க்கு மகாதேவ ஐயரவர்கள் செயல் நன்கு விளங்கும். இருக்கட்டும்; அதைப்பற்றி இனி எழுதப் பயனில்லை; மற்றவரை ஏமாற வேண்டாமென்று எச்சரிக்கும் நம்மனோர் ஏமாந்துவிட்டனர். சென்றது கருதிப் பயனில். இனிச்செய்ய வேண்டுவதென்னே?

ஒன்றைச் செய்வதாகச் சொல்லி வாங்கிய பணத்தை அதற்கு விரோதமான மற்றொன்றைச் செய்ய உபயோகப்படுத்துவதாக வாய் கூசாது அவரே சொல்லுவதால், நம்மவரிடம் இருக்கும் அப்பணத்தில் திரு. மகாதேவ ஐயர் தலையிடாக நின்றாலும் ஒருகாசு கொடுத்தல் ஆகாது என்று கூறும் நிலைவந்தது; அது வருந்தாதிருக்க முடியவில்லை. ஏன் வருந்துகின்றோம்? திரு. வ. வெ. சு. ஐயரவர்களையும் குருகுலத்தையும் நினைத்து வருந்தும் தன்மைகொண்டே.

இதுபற்றி மலேயா செட்டியார் சங்கம் ஒரு தீர்மானம் செய்திருப்பதாகக் கடிதச் செய்தி வந்துளது. அதைத் தந்திப் பகுதியிற் காணலாம். அது மிகவும் சரி. மலேயா தனவைசியரனைவரும் அத்தீர்மானப்படி நடத்தல் கடன்.

ஒருவரிடம் பணம் பெற்றுக் கொண்டு அவர் மனம் வருந்த அப்பணத்தை அவர் விருப்பத்திற்கு முற்றும் மாறான வழியிற் செலவிட எண்ணும் ஒருவர் அருகராகடைந்து அல்லற்படட்டுமென்பது சரதம்! சரதம்!! முக்காலும் சரதம்!!! அதைக் காட்டினும் இழிந்த செயல் வேறொன்று இடையாதென்பதும் தேற்றம்.

திரு. வ. வெ. சு. ஐயரவர்கள், குருகுல சம்பந்தமாக ஒரு கட்டத்தார், ஒரு சிலர் அபிப்பிராயத்திற்கு விரோதமாக—அதிக பாகத்தினர் அபிப்பிராயத்திற்குக் கொடுப்பதாகவிருந்த பணத்தை வாங்கிக்கொள்ள மறுத்தாரென்று முன்னர் ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. மனமார அன்று ஐயரவர்கள் அக்காரியம் செய்ததுண்டையானால், இன்று மலேயா நாட்டில் பணங்கொடுத்த மிகப் பலர் எண்ணத்திற்கு விரோதமாக திரு. மகாதேவ ஐயர் செய்யும் தகாச் செயலை உடனே கண்டித்துத் தந்தி கொடுத்து அவரை அந்நாட்டை விட்டு வெளியேறுவாராக! அவ்வதைச் செய்வாரோ? செய்யமாட்டாரோ? இறுதியாக நாம் கூறுவதென்னே? இன்றிருக்கும் நிலையில் பணம் வைத்திருக்கும் நம்மவர் அவரிடம் எதுவுங் கொடுக்கப்படாதென்பதே. மகாதேவ ஐயர் இனி எவ்வளவு சொன்ன போதிலும் அவர் பேச்சைச் சிறிதும் நம்புதலாகாது. இதுபற்றி இனி வஞ்சி இம்மட்டோடு விடுகின்றோம். சந்தர்ப்பம் நேர்ந்துழி எழுதுவோம்.

வஞ்சப் பத்திரிகையா? மதியில் பத்திரிகையா?

சென்ற வார ஊழியனில் பெயர் குறியாது சில பத்திரிகைகளை வஞ்சப் பத்திரிகை என்று குறிப்பிட்டிருந்தோம். வஞ்சப் பத்திரிகை எத்ததுவோ அதற்கு அது சுடுமென்பதை எவர்க்கும் நாம் கூறவேண்டுவதின்று. அது இயற்கை. ஆனால் நாம் பெயர் குறியாதெழுதியிருக்கும் பொழுது ஏதேனும் ஒரு பத்திரிகை "நீங்கள் வஞ்சப்பத்திரிகையென்று சொன்னது என்னைத்தான்" என்று வருமானால், அப்பத்திரிகையை வஞ்சப்பத்திரிகையென்று மட்டும் அழைத்தல் தகாது. மதியில் பத்திரிகை யென்றும் அழைத்தல் வேண்டும். அப்படி வஞ்சமும் மதியின்மையும் கொண்ட பத்திரிகை ஒன்று உண்டுவரப் போகின்றது. அது தான் ஆரணி எனுமூரில் திருவாளர் வி. என். அரங்கசாமி ஐயங்கார் என்பவர் ஆசிரியரெனக் குறிக்கப்பட்டு வெளிவரும் "சுகோதயம்" என்றுபெயர் சொல்லப்படுகிற பத்திரிகை. இது ஊழியனைப் பார்த்து "வஞ்சப் பத்திரிகைகள் எவை?" எனக் கேட்கின்றது. அக்கட்டுரையில் தன்னைத்தான் வஞ்சப் பத்திரிகை யென்று கூறியிருப்பதாகப் பலபல சான்றுகளெல்லாம் மிகச் சிரமப்பட்டுக் காட்டி, ஊழியனையும் அதன் ஆசிரியனையும் இழித்துக்கூறித் தன் வழக்கம்போல நாலே முக்காலே அரைக்கால் பத்தி வழவழவென்று அளந்து கொட்டியிருக்கிறது. அதிற்காணப்படும் அநாவசியமான அற்ப உரைகட்குப் பதிற் கூற நாம் விரும்பவில்லை. நாம் பொருட்படுத்திப் பதிற்றந்து கொண்டிருக்க நமது கருத்து அப்பத்திரிகைக்குச் சிறிதுமில்லையாகலின், நமது பத்திரிகையின் இடத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை. "வஞ்சப்பத்திரிகை எவை" என்ற அதன் வினாவிற்கு விடையிறுக்க வேண்டிய அவசியமின்று; வஞ்சப்பத்திரிகை இது ஒன்று மட்டுமல்ல; வேறு சிலவும் உள; அவற்றை நாம் சொல்லாதுவிட்டால் அதனால் சுகோதயத்தின் கருத்துரிமை பாதிக்கப்படாது. ஆனால் சுகோதயத்தின் அடங்கா ஆசை, தான் வஞ்சப்பத்திரிகை தானோ இல்லையா என்பதை நன்றாக எல்லாருமறியும்படி நாம் விளக்கிக் காட்டிவிட வேண்டுமென்பதே யாதலின், அதைக்கூறிவிட வேண்டுமென்றே விரும்புகின்றோம். "சுகோதயம்" வஞ்சப்பத்திரிகை என்பதே நமது கருத்து. நமது கருத்தினைக்குப் போதப்படுவரச் சுகோதயம் ஆசிரியரென அதிற்பொறிக்கப்பட்டிருக்கும் நண்பர் ஐயங்கார் ஒப்பமாட்டார். ஆனால் நமது கருத்து என்று வாளா கூறுகின்றோமா? இல்லை. தக்கசான்று காட்டுகின்றோம். வஞ்சப்பத்திரிகைமட்டுமல்ல; மதியில் பத்திரிகையுமாகுமது. இரண்டிற்குஞ் சான்றுகளுள. விஷயங்கள் பல விரிவஞ்சிச் சுருக்கமாகவே கூறுவோம்.

தீண்டாமையைப் பற்றிப் பேசிய காந்தியடிகள் "நான் பறையர் வீட்டில் சாப்பிடுவேன்" என்று சொன்னதையும் அது போன்ற பிறவற்றையும் எடுத்து வெளியிட்டது ஒருவஞ்சம்! காந்தியடிகள் பெயரைச் சொல்லிக்கொள்ளவில்லையென்றால், தஞ்செயல் வழி நிற்கலாம். அதுபற்றிச் சுகோதயம் கூறியிருக்கும் சில பல பொருளற்ற வுரைகளை நோக்கும் அறிஞர் எவரும் சிரிப்பாரேயன்றி பதிலெழுத நினையார். அந்தக்காந்தியடிகள் கட்டுரையில் இதைவிட முக்கியமென்ன? அவசரம் அவசரமாகப் பத்திரிகையைப் பார்த்தாராம்! படித்தாராம்!! மொழிபெயர்த்தாராம்!!! வெளியிட்டாராம்!!!! இந்தவரிகளைப் பார்க்கும் பேற்றைக் கண்கள் என் இழந்தன

நான்தான் வஞ்சப் பத்திரிகை என்று வந்தது ஒரு மதியின்மை. காந்தியடிகள் கொள்கையையே தான் ஆதரிக்கப் போவதாகச் சொல்லி இந்நாட்டில் வந்து பலரையேமாற்றிப் பணம் வாங்கிக் கொண்டு பணம் வந்தவுடன் பணங்கொடுத்தோர் கருத்துரிமைக்குப் போரபத்தை உண்டாக்க அடுத்தகணமே முயல்வது ஒரு வஞ்சம்.

காந்தி பிள்ளைத்தமிழ் பற்றிச் சுதேசமித்திரனில் வெளிப்போந்த கட்டுரைகளை நோக்கினால், வஞ்சமும் மதியின்மையும்பிறவும் தெற்றெனவிளங்கும். பத்திரிகைகட்கு மதிப்புரைக்கு அனுப்பும் வழக்கம்போலச் சுதேசமித்திரற்கும் பிள்ளைத்தமிழ் அனுப்பப்பட்டது. முதலில் பிரமாதமாக மதிப்புரையாக ஒரு தலையங்கம் காணப்பட்டது பிறகு காந்தி பிள்ளைத்தமிழ்ப் பொதுவாராய்ச்சி என ஒன்று காணப்பட்டது. இவ்விரண்டினும் ஒன்றற்கொன்று முரணுள்ளது இவ்விரண்டையும் எழுதியவர் அதன் ஆசிரியராகிய அரங்கசாமியையங்கார் என்பவரென்றே பத்திரிகையான் அறியக்கிடக்கின்றது.

நமது நண்பரொருவருக்கு இந்த அரங்கசாமி ஐயங்கார் எழுதிய கடிதத்தில், "காந்தி சதகத்திலும் மேம்பட்டது பிள்ளைத்தமிழ்" என யான் குறிக்கமையால், ஒரு பண்டிதர் அது சரியில்லையெனவும் பிள்ளைத் தமிழில பிழைகளிருக்கின்றனவெனவும்எடுத்துக் காட்டினர். அதனைற்றான் அவ்வாறெழுதினேன்" என எழுதியுள்ளார். அன்றி நாம் யுவருக்கு ஒன்றும் கடித மெழுதாதிருக்கும்போதே. பத்திரிகையில் எழுதியதைப்பற்றி நமக்குப்பன்னிரண்டு பக்கங்கள் கொண்ட ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் கா. மு சுந்தர முதலியாரென்பவர் கூறிய பிழைகளையே தாம் கூறியிருப்பதாகவும், அது தமக்கு உடன்பாடில்லையென்றும் குறித்திருக்கிறார். அக்கடிதத்திலுள்ள பொருள்களுள் சில வேண்டுமேல் பின்னர் வெளிப்படும். இஃதிவ்வாறாக, சுதேசமித்திரன் ஆசிரியரைக் கேட்ட சில கேள்விகட்குப் பதிலாக அச் சுதேசமித்திரனிலேயே சுந்தர முதலியாரென்ற ஒருவர் ஏதேதோ எழுதியிருக்கிறார் அதில், முந்திய பொது வாராய்ச்சி என்ற கட்டுரைதானெழுதியிருப்பதாகக் கூறுகிறார். அதன் பொருள் நமக்கு விளங்கவில்லை அதனைச் சுதேசமித்திரன் ஆசிரியரும் வெளியிட்டிருக்கிறார். எவ்வளவு மூடன் இதிலுள்ளதென்பதை அன்பர்கள் ஆராய்ச்சிக்கு விடுக்கின்றோம்.

[illegible]கதைச் சிறுமையும் மூடனும் வாய்ந்த ஒரு பத்திரிகையை வஞ்சப் பத்திரிகை யென்பதா? மதியில் பத்திரிகை என்பதா? இரங்குகிறோம்! பிறவுந்தான்!!

—

[illegible]டமறக்க

யார்? யார்? இவர் யார்?

சென்ற வாரம் நாம் "சுதேசமித்திரன்" ஆசிரியரைக்கேட்ட சில வினாக்கட்கு கா. மு. சுந்தர முதலியார் என்ற ஒருவர் விடையென ஏதேதோ எழுதியிருக்கின்றார். இவர் யார்? இவருக்கும் சுதேசமித்திரன் ஆசிரியரைக்கேட்ட வினாக்கட்கும் என்ன சம்பந்தம்? பொதுவான விஷயமெனவெண்ணி எழுதினாரெனச் சொல்லப்படலாமோ வெனின், அவ்வாறு சொல்ல முடியாமற்படியிருக்கின்றது அவர் கட்டுரையில். "நானெழுதவில்லை யென்றேன்" என்கிறார் ஒளிக்கிறது எப்பொழுது சொன்னார் இவர்? சுதேசமித்திரனில் பொதுவாராய்ச்சியென எழுதினது யாவரோ? அது ஆசிரியர் பெயரில்லின்றே எழுதப்பட்டிருக்கின்றது வயிற்றெரிச்சலால் சுதேசமித்திரன் என்ற பத்திரிகைக்கு ஆசிரியர் யாவரோ? அதன் முகப்பக்கத்தில் பெரிய எழுத்தில் ஆசிரியர் சி. ஆர். ரங்கசாமி ஐயங்கார் எனப் பொறிக்கப் பட்டிருக்கிறதே.

பேஷ்! நல்ல பத்திரிகை! நல்ல கட்டுரை! தமிழ்ப் பண்டிதர் என்று வேறு எழுதியிருக்கிறது! ஒன்றாகும் பொருளில்லை. அதில் காணப்படும் விஷயங்களுக்குக் "கொடாதம்" என்பது முடிக்கவுடன் பதில் எழுதப்படும். இவர் கூறுவனவற்றைப்பார்க்கால் தமிழ்ப்புலமைக்கும் இவருக்கும் சம்பந்தம் இருக்காதென்று எந்தத் தமிழ்ப் புலவரும் கூறிவிடுவர். தமிழ் இலக்கியங்களுள் இனிமையிற் சிறந்த நூலொன்று இருக்குமோவெனச் சந்தேகிக்கத்தக்க தான=ஆபாசக் களஞ்சியமான "காந்தி சதகம்" என்ற நூலை இயற்றியவர் இந்த முதலியார் தாம் போலும்! காந்திசதகத்தை இயற்றியவர் இவராகவிருந்தால், பிள்ளைத் தமிழைப்பற்றி இவர் எழுதியிருப்பதில் வியப்பொன்றுமில்லை. இவர் கட்டுரையை முடிப்பாராக. விடை பின்னர் எழுதுவோம். இவர் கேட்கும் வினாக்கட்கு. பிள்ளைத்தமிழ் பாடுவதில் கீர்த்தி வாய்ந்தவர்களான பல அறிஞர்கள் திருவாய்மொழியை எடுத்து இயம்பத் தயாராகவிருக்கின்றோம்

சங்கங்களால் நன்மை

இரங்கூனில் கம்பவர் கப்பலில் பல வசதிகள் பெற்றிருக்கின்றனரென்பதை வேறு பக்கச்செய்தியானறியலாகும் இந்நன்மையேற்பட்டது சங்கத்தாலன்றோ?

இயந்திர வண்டிகளின்

விபத்து.

இயந்திரவண்டிகளில் இக்காலம் ஏற்படும்விபத்துக்கு எல்லையில்லை. மிகவும் கொடுமையான சம்பவங்கள் பலப்பல நிகழ்கின்றன. அரசாங்கத்தார் தக்கது செய்ய முந்துவாராக.

அடுத்த வாரம் வரும்.

பிராமண சமாராதனையைப் பற்றி திரு என் எஸ் வெங்கடராமய்யரவர்கள் செயலைக் கண்டித்துவந்திருக்கும் வேறு சில கட்டுரைகள் இவ்வாரம் இடமின்மையின் நிறுத்தப்பட்டிருக்கிறது. அவை அடுத்தவாரம் வரும்

—

தேவகோட்டை.

(நமது நிருபரிடமிருந்து)

ஓர் பொதுக்கூட்டம்.

இம்மாதம் கசம் நாள் மாலை கூமணிக்கு வெள்ளையனூருணிப் பிள்ளையார் கோவிலுக்கு எதிரிலுள்ள திடலில், இந்நகர வாசிகளின் பொதுக்கூட்டம் ஒன்று கூடுகிறது. அவ்வமயம், பொது மக்களுக்கு இன்றியமையாப் பல தீர்மானங்கள் செய்யப்படுமெனவும் ஸ்ரீ விவேகானந்த புத்தகசாலையாரின் முயற்சியால் இம்மகாநாடு கூட்டப்படுமெனவும் அறிகிறோம்.

மாகாணாதிபதியின் விஜயம்:—

மே. த. சென்னை மாகாணாதிபதி இம்மாதம் அம் நாள் பகல் கஉமணிக்கு இந்நகருக்கு விஜயஞ் செய்ய, சித்தி விநாயகர் ஆலயவளவில் ஸ்தலஸ்தாபன சபைத்தலைவரால் வரவேற்கப்படுவார். பிறகு சிவன்கோவிலருகில் அமைத்திருக்கும் பந்தலில் ஸ்தலஸ்தாபன சபைத்தலைவரால் தமிழில் ஒரு உபசாரப் பத்திரம் வாசிக்கப்பெறும். ஆங்கில பாடையில் மொழி பெயர்க்கப்பெற்ற பிரதி, மாகாணாதிபதிக்கு அளிக்கப்பெறும் பிறகு தண்ணீர்க்குழாய்க்கு அவ்விடத்திலேயே அஸ்திவாரக் கல் நாட்டுவார். பிறகு தண்ணீர்க்குழாய்க்கழகத்தாரால் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பெறும். பின்னர் க மணிக்கு அழ. அரு. ராம. வீட்டில் விருந்துண்ட பின், மாலை சமணிக்கு ராவ்பகதூர் பெரி, சோமசுந்தரச் செட்டியார் வீட்டில் தேயிலை பானம் அருந்தி சிட்டு, கூ-கிக்கு இயந்திரவண்டியின் எதிர்வெகெல்லை செல்வார் என அறிகிறோம்.

கடிதம்.

இந்து தேவஸ்தான தர்ம பரிபாலன சட்டத்தைப் பற்றி ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஸ்ரீமான்களான வைத்யநாதயுடு அவர்களுக்கும் கலியாண சுந்தர முதலியார்அவர்களுக்கும் எழுதின கடிதம்.

அன்புள்ள வைத்யா வீரராஜுலு நாயுடுகாரு அவர்களுக்கும் ஸ்ரீமான் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்களுக்கும் ஈரோடு ஈ. வெ. ராமசாமி அநேக நமஸ்காரம்; ஐயா!

இந்து தேவஸ்தான சட்ட சம்மந்தமாய்ச் சமீபத்தில் சிலரால்நடத்தப்படும் கண்டனக் கிளர்ச்சிகளைக் கவனித்துப் பார்த்து வந்தவர்கள் இது மத சம்பந்தமான கிளர்ச்சியல்ல வென்றும் சுயநலத்தை அடிப் படையாய்க் கொண்ட வகுப்பு சம்பந்தமான கட்சிவாதம் என்றும் இப்பொழுதாவது உணர்ந்திருப்பார்கள். வகுப்பு சம்பந்தமான சுயநலங்களை மனதில் வைத்து மத சம்பந்தமான கிளர்ச்சி என்று போலிப் பெயரால் இந்துக்களின் பெரும்பான்மையோராயிருக்கிற பல சமூகத்தாருக்கு இழிவும் நஷ்டமும் உண்டாகும்படி இந்துக்களில ஒரு மிகச்சிறு கூட்டத்தார் தங்களுடைய தந்திரத்தினாலேயும், கூடா ஒழுக்கமுள்ள மடாதிபதிகள் மகந்துக்கள், மதாச்சாரியர்கள்முதலானவர்களாலும் உதவப்பட்ட பணச்செருக்குகளாலேயும், செய்துவரும் சூழ்ச்சிப் பிரசாரங்களினாலேயும் இந்துக்களின், மேல்கண்ட இழிவுக்கும் கஷ்டங்களுக்கும் நஷ்டங்களிக்கும் சம்பந்தப்பட்ட சமூகத்தாரில் தரித்திரத்தினாலும் பேராசையினாலும் சுய நல நிதியும் அழுந்திக்கிடக்கும் ஒருசிலரை விலைக்கு வாங்கிக்கொண்டு அவர்கள் மூலமாகவும் தங்கள் விஷமப் பிரசாரத்தைச் செய்து நம்மவர்களை ஏமாறச் செய்து கொண்டு வருவதை நாம் பார்த்துக் கொண்டுவருவது பெரிய தேசத்துரோகமும் மதத் துரோகமும் சமூகத் துரோகமும் ஆகும் என்பது நான் சொல்லாமலே தங்கள்போன்ற பெரியோர்களுக்கு விளங்கும். உண்மையிலேயே இந்த தேவஸ்தான சட்டம் மத விரோதமானது என்று நினைத்து தப்பபிப்பிராயத்துடன் கிளர்ச்சி செய்பவர்களும் சிலர் இருந்திருக்கலாம எப்படியிருந்தாலும் இந்த தேவஸ்தான சட்டத்திற்கு விரோதமாகச் செய்யும் கிளர்ச்சிகளைத் தேச மத சமூக நன்மையைக்கோரி நசுக்கப் பிரயத்தனப்பட வேண்டியது அவசியம் என்பது வெகுஜன அபிப்பிராயம். அப்படிச் செய்வதனால் பிராமணத்துவேஷம் என்று சொல்லப்பட்டு விடுமோ? பிராமணர்களின் புன் சிரிப்பு மறைந்துவிடுமோ? வைதீக உலகத்தில் தமக்குச் செல்வாக்கு குறைந்துவிடுமோ? என்கிற பயம் நம்மவர்களில் தக்கவர்களான அநேகருக்குக் கூட இருந்துமௌனம் சாதிக்கச் செய்து வருவது எனக்குத் தெரியும்.

ஆனால் அவர்கள் பிராமண உலகத்தைத் தப்பாய் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது என்து துணிபு; எல்லாப் பிராமணர்களையும் நாம் ஒரே மாதிரியாய் நினைத்துக் கொண்டிருப்பதால் நமக்கு இவ்வித பயம் ஏற்படுகின்றது. பிராமண சமூகத்தில் நேர்மையானவர்களும் பொதுநோக்கு உடையவர்களும் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்குத் தேசத்தில் உண்மையானசெல்வாக்கு இருக்கிறது என்பதையும், நாம் மறவாமல் இருந்தால் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. அப்படி மீறி நிஷ்டூரங்களும் செல்வாக்குக் குறைவுகளும் ஏற்பட்டபோதிலும் அவை வெகு நாளைக்கு நிலைத்திருக்கா. எதுபோல் என்றால் புண்ணைக் கீறி ஆற்றுவது போலாகும். கீறும்போது கொஞ்ச நேரம் அதிக நோவு உண்டாவது போலவும் பிறகு சுத்தமாய் ஆறி விடுவதுபோலவுந்தான் முடியும். நிஷ்டூரத்திற்கும் புன் சிரிப்புக்கும் பயந்து தேசத்தையும், சமூகத்தையும், மதத்தையும் காட்டிக் கொடுப்பது மேலா அல்லது தைரியமாய் யாரிடத்திலும் துவேஷமில்லாமல் சத்தியத்தைச் சொல்லித் தோஷங்களை யெல்லாம் நிவர்த்திக்கச் சீக்கிரத்தில் எல்லோரும் ஒன்றாய்க் கலந்து ஒத்து வாழச் செய்வது மேலா. ஆகையால் இவ்விஷயங்களுக்காகச் சென்னையில் பெரிய கூட்டங் கூட்டி இந்துக்களில் சகல வகுப்பாரையும் அழைத்துப் போலி பிரசாரங்களையும், சூழ்ச்சிகளையும் அடக்கவும் உண்மையைப் பாமர ஜனங்களுக்கு விளக்கவும் தகுந்தபடி தேசத்தில பிரசாரம் செய்யவும் பிரசார செலவுக்குப் பணம் சேகரிக்கவும் ஒரு நிர்வாக சபை ஏற்படுத்த உடனே வேண்டிய ஏற்பாடு செய்ய வேணுமாய்க் கோருகிறேன். சென்னையில் என்று எழுதி இருப்பதனால் சென்னையில் என்றே நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஈரோட்டிலோ, திருப்பூரிலோ, திருச்சியிலோ, கோயமுத்தூரிலோ அல்லது தங்களுக்குச் சௌகரியமான எந்த இடத்திலானாலும் சரி. விஷயம் அவசரம் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஈ. வெ. இராமஸ்வாமி,

குறிப்பு:—இதைப் பொது நன்மையை உத்தேசித்து பிரசித்தப் படுத்தியிருப்பதால் இதில் அபிமானங்கொண்டு கலந்துகொள்ள இஷ்டமுள்ள கனவான்கள் ஈரோட்டிற்கு என் விலாசத்திற்கு எழுதக் கோருகிறேன். ஈ. வெ. ரா.

—

ஓர் சந்தேகம்.

—

நமது நாட்டிலுள்ள மடாதிபதிகளும் ஆசார்ய சுவாமிகளும் ரயில் மோட்டார் முதலிய சௌகரியங்க ளேற்பட்டிருக்கும் இக்காலத்திலும் பல்லக்கிலேயே பிரயாணம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். சுருக்கமான செலவில் ரயில் மோட்டார் முதலியவற்றில் சுகமாகப் பிரயாணம் செய்வதை விடுத்துப் பல்லக்கில் பிரயாணஞ்செய்வதால் பல அசௌகரியங்களும் வீண் செலவும் ஏற்படுவது தெரிந்திருந்தும் அவ்வழக்கத்தை விட்டொழியாது கையாண்டு வருவது ஏனோ?

மேற்கண்ட சந்தேகத்தை இவண் விஜயம் செய்திருக்கும் கும்பகோணம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் நிவர்த்திப்பார்களா? முன், தேவகோட்டை எம். சோமசுந்தரம் செட்டியார் என்பவர் சுவாமிகளைப் பகிரங்கமாகக் கேட்ட கேள்விக்கு இதுகாறும் சுவாமிகள் பதிலிறுக்கவில்லை யென்று தெரிகிறது. இது விஷயமாகச் சில பிராமண நண்பர்களை வினவியதில், பத்திரிகை மூலம் கேட்கிற சந்தேகங்களுக்கெல்லாம் விடையிறுப்பது சாத்தியமாகாதென்றும், சுவாமிகளை நேரில் கேட்டால் சொல்லுவார்களென்றும் சொன்னார்கள். பத்திரிகைகளில் வருகிற கேள்விகளை ஆச்சார்ய சுவாமிகள் அறிந்துகொள்வதற்குச் சந்தர்ப்ப மேற்படாதென்றே யானும் கருதுகிறேன். ஆயினும் சுவாமிகளிடத்தில் சதாகாலமும் பழகிக்கொண்டிருக்கும் அறிஞர்களுக்கு இது விஷயம் தெரியாதிருப்பதற்கு நியாயமில்லை. அவர்களாவது சுவாமிகளைக் கேட்டு மேற்படி கேள்விக்குப் பதிலெழுதியிருக்கலாம். எக்காரணம் பற்றிப் பதில் கூறாதிருக்கிறார்களென்பது தெரியவில்லை.

நமது நாட்டில் இந்துமதம் அருகிக் கிறிஸ்து மதம் பரவிவருமிக்காலத்தில், நமது மதத்தைப் பரவச் செய்யப் பிரசாரம் செய்யவேண்டிய தவசியம். ஆகையால், ஆயிரக்கணக்கான மைல்களுக்குச் சிவிகையிலேயே பிரயாணம் செய்யும் வழக்கத்தைநிறுத்திவிட்டால், நாட்டிற்கு நன்மை ஏற்படுமென்ற நம்பிக்கை சிறியேனுக்கும் மற்றும் பல அறிவாளிகளுக்குமிருப்பதால், சிவிகையைத் தவிர வேறு எதிலும் பிரயாணம் செய்யக்கூடாது என்பதற்கு ஆதாரம் காட்டவேண்டுவது மிக அவசியம். சுவாமிகளுக்குச் சிஷ்ய கோடிகள் அனந்தமிருப்பதால், இச்செய்திசுவாமிகள் காதுக்கு எவ்விதத்திலும் எட்டுமாகையானும், பொதுஜனங்களின் சந்தேகத்தை நிவர்த்திப்பது ஆச்சார்ய சுவாமி கடமையாகையானும் இது எழுதலானேன். ஆகையால் ஆச்சார்ய சுவாமிகள் கருணைகூர்ந்து சந்தேக நிவர்த்தி செய்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

ஓர் சந்தேகி.

—

பிராம்மண சமாராதனைகள்.

—

சென்ற வாரத்து ஊழியனில் ஸ்ரீமான் என். எஸ். வெங்கடராமய்யர் அவர்களால் மேலேகண்ட தலைப்பின் கீழ் எழுதப்பட்ட ஒரு வியாசத்தைக் கண்ணுற்றேன். அதில் பிராமண சந்தர்ப்பணையினால் தேவானுக்கிரகமுண்டென்று குறிக்கப்பட்டிருக்கிறது.

அய்யரவர்கள் "பிராமணர்" என்று குறிப்பிடுவது ஒழுக்கத்தாலுண்டாய பிராமணரையா? அல்லது, தற்காலத்திலுள்ள ஒருவகுப்பார் தங்களைப் பிறப்பால பிராமணர் என்கின்றனரே, அக் கூட்டத்தையா?

அவர்கள்வியாசத்தில், சங்கராச்சாரிய சுவாமிகள் காரைக்குடி வருகையைக் குறிப்பிடுகையில், எழுதியுள்ள விஷயங்களினின்றும் பின்னவர் என்றே கொள்ளவேண்டியதிருக்கிறது. அப்படியாயின் ஒரு சாஸ்திரிக்குப் பிறந்த தன்மையினாலே, ஒருவன் உண்மையில் சாஸ்திரியாக முடியுமென்று ஐயரவர்கள் கூறுகின்றார்களா? பலர் தங்கள் பெயருக்குப்பின்னால் சாஸ்திரி என்றவார்த்தையையும் சேர்த்துக்கொண்டுபடிப்பின்றிச்சோற்றுக்கடை (கிளப்பு) நடத்துவதைநாம் காண்கின்றோம். அவர் சாஸ்திரியோ பிராமணரோ?

பல சோம்பேறிகள் (பிராமணர்) சுவாமிகள் செல்லுமிடமெல்லாம் சென்று தக்[illegible]பந்தியில் சாப்பிட்டுவிட்டு நாள் தவறாது குட்டிச்சுவடி படிக்கின்றனர். (சீட்டாடுகின்றனர்) இவர்கள் பிராமணரோ?

இவர்களுக்கெல்லாம் போஜனம் செய்து வைப்பதால் நன்மையுண்டோ? சோம்பேறித்தனத்தையாதரிப்பதாகவன்றோ முடியும்? இவைகளை எல்லாம் கவனியாது, பூணூல் போட்டுப் பிராமணர் என்று வருபவர்க்கெல்லாம் அன்னமிடுவதால் "புண்ணியம்? அது தெய்வப்பிரீதி" என்றிருக்குமாயின், எல்லாப் பொருள்களையும் கொட்டி யளந்தவள்ளுவனார், பிறப்பால் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் வகுப்பினருக்குச் சோறிட்டால் அதிக புண்ணிய முண்டென்று கூறி இருக்கலாமே. அப்படித் தெரியவில்லையே. எவரும் செய்பத்தகாத இழிதொழில் புரிவோரும் பிராமணர்தாமோ? அவரெல்லாம் சந்தர்ப்பணையில் சாப்பிடுவதால் தேவானுக்கிரஹம் உண்டோ? ஐயரவர்கள் ஆதாரத்தோடு விளக்குவார்களாக.

அ. வே. தியாகராஜா.

நோட்டீஸ்.

தேவகோட்டை டி. மு. கோர்ட்டு.

௲௯௨௫ இஸு அசல் நெ. ௭௧.

வ. மு. பழனியப்பனம்பலம் வாதி

எஸ். ஆர். எம். எம். வி. டி.

முத்தையா செட்டியாரவர்கள் ௧.

வெங்கிடாசலம் பிள்ளை ௨

பிரதிவாதிகள்

எழுவங்கோட்டை தாலூகா கொத்தமங்கலம் கிராமத்தில் டிஷ கிராமத்தார்களின் பொது உபயோகத்துக்காக ஏற்பட்டு பொதுவாக உபயோகித்துவரப்படுகிறதும் டிஷ நெ. சித்தாரணிக்கு தென்கிழக்கே உள்ள இடத்தில் இந்த நிம்பர் பிரதிவாதிகள் டிஷ இடத்தை டிஷ பொது உபயோகத்துக்குமாக கட்டடம் கட்டயேற்பாடு செய்வதில் யாதொரு உபயோகமும் செய்யக்கூடாதென்று டிஷ கிராமத்தார்களுக்காகவும் தனக்காகவும் டிஷ நெ வாதியால் இந்த வியாஜ்யம் போட அனுமதி கோரி வியாஜ்யம் தாக்கலாகி ௭—௯—௨௫க்கு வாயிதா யேற்பட்டிருக்கிறது.

இ. நடராஜய்யர், வக்கீல்.

தேவகோட்டை ௧௯—௨—௨௫.

இனிய தமிழ்நாவல்கள்.

வடூவூர் துரைஸாமிஐயங்காரவர்கள் B. A. இயற்றியவை.

விலாஸவதி (௧,௨-பாகங்கள்)	௯	0	0
மதனகல்யாணி (௧,௨,௩).	௪	அ	0
பூர்ணசந்திரோதயம் (௧, ௨, ௩, ௪)	௭	அ	0
காளிங்கராயன் கோட்டை ரகஸியம்(௧, ௨)	௪	0	0
சௌந்தரகோகிலம்	௧	அ	0
மேனகா (௧, ௨)	௩	0	0
கும்பகோணம்வக்கீல்(௧,௨)	௩	0	0
பாலாமணி (௧, ௨)	௨	அ	0
வஸந்தமல்லிகா	௧	அ	0
விக்ரமாதித்தர்	௧	௪	0
திலோத்தமா	0	௧௨	0
மாணிக்கவாசகர்	0	அ	0

தபாற்கூலி வேறு.

வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் இயற்றியவை.

மனம்போலவாழ்வு	0	அ	0
மெய்யறம்	0	அ	0
வள்ளி சரித்திரம்	0	அ	0
திருக்குறள் (மணக்குடவருரை) அறத்துப்பால்	௩	0	0

சுதேசமித்திரன் புத்தகசாலை.

பகவத்கீதை (தமிழ்மொழிபெயர்ப்பு)	௩	0	0
தீர்க்கதரிசிகள்சரித்திரம் (காலிகோபைண்டு)	௨	௪	0

தீர்க்கதரிசிகள்சரித்திரம்.

சங்கரர், இராமானுஜர், மத்வர் கௌதமபுத்தர், குருநானக், மகாவீரர், மகமதுநபீ தனித்தனி	0	௫	0

தேசீய ஞானத்தையும், தேசாபிமானத்தையும் புகட்டக்கூடிய உயர்ந்த தமிழ் நூல்கள். கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதியவை.

மகாத்மாகாந்தி	௧	அ	0
திலகர்	௧	அ	0
நெபோலியன்	௧	அ	
அவிசுகோதரர்கள்	௧	அ	
இந்தியாஇழந்தசெல்வம்	௧	0	
இராஜரீகசாஸ்திரம்	௧	0	0
ஆன்மசக்தி	0	௧0	0
ராஜராஜசோழன்	0	௧0	0
அசோகன்	0	அ	0
கும்பகோணம்	0	௬	0
டால்ஸ்டாய்	0	௪	0
நேரு	0	௨	0
சிவாஜி	௧	0	0

பாலர்கட்கு அவசியமாக் கேவையாக உள்ளவை.

பாலபோதினி	0	௨	0
முதல்பாலபாடம்	0	௩	0

ஸி. சுப்பிரமணிய பாரதியாரவர்கள் இயற்றிய கீதங்கள்.

முதற்பாகம்	௧	0	0
இரண்டாம்பாகம்	௧	0	0
மூன்றாம்பாகம்	0	௧0	0
நான்காம்பாகம்	0	அ	0
ஐந்தாம்பாகம்	0	௧௨	0

வள்ளுவர் நிலையம், காரைக்குடி.

உ

ஸ்ரீ மீனாக்ஷிதர்ம ஊமைப் பிள்ளைகள் பள்ளிக்கூடம்.

மதுரை.

மதுரை மேலமாசி வீதி கல்லறைச் சந்து ௨௫-நிம்பர் வீட்டில் ஊமைப்பிள்ளைகளைப் பேசுவித்து படிக்கவும் கணக்குச்செய்யும படியும் செய்வதுடன் ஏழை மாணவர்களுக்கு அன்னவஸ்திரமும் உறைவிடமும் தர்மத்திற்காகக் கொடுத்து நடத்தி வைக்கும் பள்ளிக்கூடம், ௧௯௨0வரு முதல் நடைபெற்று வருகிறது. ஊமைப்பிள்ளைகளுடைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவ்விடம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கைத்தொழில்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. வேண்டிய விபரத்திற்கு டிஷ பள்ளிக்கூடம் மானேஜர் சாமிபிச்சம்மாளுக்கும் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

தனவைசிய ஊழியன் சந்தா விபரம்.

உள்நாட்டிற்கு வருஷ சந்தா	ரூ.	௫	0	0
வெளி நாட்டிற்கு டிஷ		௬	0	0
தனிப்பிரதி ௧-க்கு		0	௨	0

விளம்பரம்.

மாதம் ௧-க்கு பத்தி ௧-க்கு	ரூ	௨௦
டிஷ பத்தி அரைக்கு	ரூ	௧௧
டிஷ கால் பத்திக்கு	ரூ	௬
டிஷ அங்குலம்௧-க்கு	ரூ	௨
ஒருபக்கம் விளம்பரம் செய்ய ஒரு மாதத்திற்கு	ரூ	௫0
டிஷ ஒரு வாரத்திற்கு	ரூ	௧௫

மூன்று மாதங்கள் விளம்பரஞ் செய்வோருக்கு மாதம் ஒன்றுக்கு பத்தி ஒன்றுக்கு ரூ. ௧௭- ஆகவும், அரைப்பத்திக்கு ரூ. ௬-ஆகவும், கால்பத்திக்கு ரூ. ௫-ஆகவும் போடப்படும்,

ஆறு மாதங்களும் அதிற்கதிகமாகவும் விளம்பரம் செய்வோருக்கு மாதம் ஒன்றுக்கு பத்தி ௧-க்கு ரூ. ௧௫-வீதமும், அரைப்பத்திக்கு ரூ. அ-வீதமும், கால் பத்திக்கு ரூ. ௪-வீதமும் போடப்படும்.

காரியஸ்தர், "தனவைசிய ஊழியன்" காரைக்குடி.

ஸ்ரீ சமட்க லக்ஷ்மி ஹால்

சி. கே. உச்சப்பா, ஹநுமந்தப்பா

ஜரிகை, பட்டு புடவை வியாபாரிகள்

பெங்களூர். (பிராஞ்சு) காரைக்குடி.

ககஉச-ஹு நவம்பர்-மீ கஅ-உக்கு ரக்தாக்ஷி-ஹு கார்த்திகை-மீ ந-உ மைசூர் சமஸ்தானம் பெங்களூர் டவுன் சிக்கபேட்டையிலிருக்கும் சி. கே உச்சப்பா பிரதர்ஸ் என்பவரை எனக்கு ரு-வருஷ காலமாய் நன்றாய்த் தெரியும். இப்போது அவர் மைசூர் சமஸ்தானத்தில் ரெப்ரஸெண்டேடிவ் அசம்பிளி மெம்பராக இருந்து வருகிறார்.

அவரும் அவருடன் கூட பிறந்த சகோதரர்களும் ஒரே குடும்பமாய் ஒற்றுமையுடன் தொழிற் செய்து நாணயமாய் நல்ல நடையுடன் நமது நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு உபயோகப்படக்கூடிய சக-முழம் கஉ-முழம் பெங்களூர் பட்டுச்சேலை கண்டாங்கி வகையறுக்களும் நல்ல ரகங்களில் பலவிதமான கலர்களிலும் கெட்டியான சாயமாகவும் சொந்தமாய் நெசவு தரிகள் வைத்துச் செவ்வையாக அதிக ஊக்கத்துடன் நடத்தி நம்மள் நகரங்களுக்கு நடு நாயகமாக விளங்கிவரும் மேன்மைபொருந்திய காரைக்குடியில் கடை திறந்து வியாபாரம் செய்து வருகிறார்கள்

ஷையாரிடம் நான் என்னுடைய குடும்ப சொந்த உபயோகத்திற்கும் எங்கள் சொந்தக்காரர்களுக்குமாக ரூ, க0,000 பத்தாயிரம் ரூபாய் வரையில் மேலே கண்ட பட்டுச்சேலை கண்டாங்கி வகையறு பல ரகங்களும் வாங்கி உபயோகப்படுத்தி அனுபவித்துப் பார்த்த வரையில் நல்ல கெட்டிச் சாயமாகவும் நாணயமான சரக்காகவும் இருக்கின்றது.

நான் இப்போது புரட்டாசி-மீ மைசூர் தஸரா பார்க்கப்போய்த் திரும்பி வரும் பொழுது பெங்களூர் டவுனில் ஷையார் சொந்தமாய்ச் செய்துவரும் நெசவு தரி முதலியவற்றையும் நேரில் பார்த்து அதிக சந்தோஷமடைந்தேன்.

உலகத்தில் தர்மஸ்வரூபியாக விளங்கிவரும் நமது நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களாகிய எமது அருமைச் சகோதரர்களனைவருக்கும் தெரியப்படுத்தவேண்டியதின் பொருட்டு இந்த நற்சாட்சிப்பத்திரம் எழுதிக் கொடுக்கத் துணிந்தேன்.

நமது எல்லா நண்பர்களும் இதை அன்புடன் நேசித்து என்னுடைய சிறுமொழிகளை அங்கீகரிக்கும்படியாய் எல்லாம்வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

(Sd) தீ. நா. முத்தையா செட்டியார் F. R. S. A, & M. L. C.

ராமச்சந்திரபுரம்,

புதுக்கோட்டை சமஸ்தானம்,

திருச்சி ஜில்லா.

ய. சொக்கலிங்கனால் காரைக்குடி தனவைசியஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சியற்றிப்பிரசுரஞ் செய்யப்பெற்றது

END OF
ISSUE